Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, ஆகஸ்ட் 07, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 24

## பலவீனமாக உள்ளவர்களுக்கு கூடுதல் சிகிச்சை அளிப்பதுடன், தடுப்பூசிகளை செலுத்தினால் கொரோனா வைரஸ் உருமாற்றத்தை தடுக்க முடியும் - விஞ்ஞானிகள் தகவல்

புதுடெல்லி, ஆகஸ்ட் 07 2021: கொரோனா வைரஸ் இதுவரை ஆயிரக்கணக்கான உருமாற்றங்களை அடைந்துள்ளது. இந்தியாவில் 2 முறை உருமாறிய கொரோனா வைரசான டெல்டா தாக்கியதால்தான் 2-வது அலை உருவானது.

உருமாற்றம் அடையும் வைரஸ்களில் ஒருசில மட்டும் அதிக வீரியம் கொண்டவையாக உருவாகி விடுகின்றன. அவற்றால்தான் பாதிப்பு அதிகமாகிறது.

இந்த வைரஸ்கள் உருமாற்றம் அடைவதற்கு மனித உடலில் உள்ள குறைபாடுகள்தான் காரணம் என்று தெரிய வந்துள்ளது. அதாவது நோய் எதிர்ப்பு சக்திகள் குறைந்த பலவீனமான நபர்களை வைரஸ்கள் தாக்கும் போது அவை உருமாற்றம் அடைவது தெரிய வந்துள்ளது. குறிப்பாக புற்றுநோய், எய்ட்ஸ், காசநோய் போன்றவை தாக்கியவர்கள் ஏற்கனவே நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து பலவீனமானவர்களாக இருப்பார்கள். இவ்வாறு இணை நோய் உள்ளவர்களை தாக்கும் வைரஸ்கள் உருமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. எனவே பலவீனமாக உள்ளவர்களுக்கு கூடுதல் சிகிச்சை அளிப்பதுடன், தடுப்பூசிகளை செலுத்தினால் கொரோனா



வைரஸ் உருமாற்றத்தை தடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் ஆய்வில் தெரிய வந்துள்ளது. இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் மருத்துவ பத்திரிகையில் இதுபற்றிய ஆராய்ச்சி கட்டுரை வெளிவந்துள்ளது. எனவே பலவீனமாக உள்ளவர்களுக்கு நோய் தொற்றாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கூறி உள்ளனர்.

## பெயர் சேர்த்தல், நீக்குதல் மேற்கொள்வதற்காக நவம்பர் 1-ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் - தமிழக தலைமை தேர்தல் அதிகாரி

சென்னை, ஆகஸ்ட் 07 2021: பெயர் சேர்த்தல், நீக்குதல் போன்ற திருத்த பணிகளை மேற்கொள்வதற்காக நவம்பர் 1-ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

1.1.2022-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 1.11.2021 அன்று வெளியிடப்படும். அன்று முதல் 30-ந்தேதி வரை ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகளை சமர்ப்பிக்கலாம். 20.12.2021 வரை ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். 5.1.2022 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

தகுதியுள்ள வாக்காளர்கள் தங்களது பெயரை பதிவு செய்யவோ அல்லது நீக்கம், திருத்தம், இடமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ளவோ படிவம் 6,7,8, அல்லது 8ஏ-ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

ஏதேனும் அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலையஅலுவலர், வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் இந்த மனுக்களை அளிக்கலாம். சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலையங்களில் நடக்கும் சிறப்பு முகாம்களின்போது வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் மனு கொடுக்கலாம். சிறப்பு முகாம் தேதிகள் பின்னர் தெரிவிக்கப்படும்.



அலுவலக நாட்களில் சிறப்பு சுருக்கமுறை திருத்த ஏற்புரை மற்றும் மறுப்புரை காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் வழங்கலாம்.

www.nvsp.in என்ற இணையதள முகவரி மற்றும் ‘வாக்காளர் உதவி’ எனப்படும் செல்போன் செயலி போன்றவற்றின் மூலமும் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டு உள்ளது.

1.1.2022 அன்று 18 வயது நிறைவடைய உள்ளவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

வாக்காளரின் பெயர் ஏற்கனவே பட்டியலில் இருந்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை தவற விட்டு இருந்தால் எந்த நேரத்திலும் தாசில்தார், மண்டல அலுவலகத்தில் படிவம் 1-ல் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொரோனா மூன்றாவது அலைக்கான அறிகுறி தென்படவில்லை மருத்துவ நிபுணர்கள்

புதுடெல்லி, ஆகஸ்ட் 07 2021: கொரோனா 2-வது அலை இந்தியாவில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. அடுத்ததாக 3-வது அலை தாக்கப்போவதாக நிபுணர்கள் எச்சரித்து இருந்தனர். இந்த மாதத்திலேயே அதன் தாக்கத்தை தொடங்கலாம் என்று கூறினார்கள். ஆனால் 3-வது அலை தொடங்குவதற்கான அறிகுறி தென்படவில்லை என்று பொதுசுகாதார மருத்துவ நிபுணரும் ஒருங்கிணைந்த உயிரியல் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குனருமான டாக்டர் அனுராக் அகர்வால் கூறினார். இது சம்பந்தமாக அவர் கூறியதாவது: டெல்டா வைரஸ் காரணமாக இந்தியாவில் கொரோனா 2-வது அலை ஏற்பட்டது. 2-வது அலை பல மாநிலங்களில் இன்னும் முடிவுக்கு வரவில்லை. வடகிழக்கு மாநிலங்களில் தாமதமாக 2-வது அலை தொடங்கியது. கேரளாவிலும் சில மாநிலங்களிலும் 2-வது அலை தொடர்ந்து நீடித்து கொண்டிருக்கிறது. 3-வது அலை தாக்குவதற்கான அறிகுறிகள் இன்னும் தென்படவில்லை. 2-வது அலை இன்னும் தொடர்ந்து நீடிக்கலாம். அது இன்னும் பல பகுதிகளில் தாக்குதலை தொடங்கவே இல்லை. அது மேலும் உயர்கிறதா? என்பதை பார்க்க வேண்டும்.

ஒரு வேளை 3-வது அலை உருவாகினால் ஏற்கனவே தாக்கிய முதல் இரண்டு அலைகளையும் விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அதிக மருத்துவ வசதிகள் தேவைப்படலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**திண்டுக்கல், ஆகஸ்ட் 07 2021: திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு அகரம் ஊராட்சி, உலகம்பட்டி அருகே மாங்கரைஆற்றின் குறுக்கே ரூ. 7.70 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து மாயாண்டி குளத்திற்கு தண்ணீர் வழங்கும் பணி துவக்க விழாவினை கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் விசாகன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.**



## காலத்திற்கு ஒவ்வாத ’சட்ட மேலவையை’ மீண்டும் கொண்டுவரும் முயற்சிகளைக் கைவிட வேண்டும் - கமல் ஹாசன்

சென்னை, ஆகஸ்ட் 07 2021: பெருந்தனக்காரர்களும், ஜமீன்தார்களும் பிரிட்டிஷாருக்கு ஆலோசனை சொல்ல உருவாக்கப்பட்ட கவுரவ அமைப்பே ‘சட்ட மேலவை’யின் மூலவடிவம். விடுதலைக்குப் பின் ஜனநாயகம் மலர்ந்து மக்கள் பிரதிநிதிகளின் சட்டமன்றம் உருவான பிறகு இந்த அவையின் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. இன்று இந்தியாவில் சில மாநிலங்களில் மட்டுமே மேலவை இருக்கிறது. ஒரு காலத்தில் மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா, சொல்லின் செல்வர் ம.பொ.சி, கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் என்று பல ஆளுமைகள் மேலவையில் இடம்பெற்றிருந்தனர். செறிவான பல விவாதங்கள் நிகழ்ந்தன. ஆனால் அரசியல் தலையீடுகளால் இந்த அவை தன் மாண்பை இழந்தது. கட்சிகள் தங்களுக்கு வேண்டியவர்களைத் திருப்தி செய்வதற்காக மேலவைப் பதவிகளைப் பயன்படுத்திக்கொண்டன. திவால் நோட்டீஸ் கொடுத்த ஒருவரை மேலவை உறுப்பினராக நியமனம் செய்ததால், சர்ச்சை வெடித்தது. அப்போதைய முதல்வராக இருந்த எம்ஜிஆர் மேலவையைக் கலைத்தார். திமுக ஆட்சிக்கு வரும் சமயத்திலெல்லாம் மேலவையைக் கொண்டுவரும் முயற்சியில் தீர்மானங்களை நிறைவேற்றுவதும் அடுத்துவரும் அதிமுக அந்த முயற்சியை முறியடிப்பதும் தொடர் நிகழ்வு. வரவிருக்கும் நிதிநிலை அறிக்கை சட்டமன்ற தொடரில் மீண்டும் மேலவை கொண்டுவருவதற்கான தீர்மானத்தை திமுக அரசு கொண்டு வரவிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சட்டமன்றம் இருக்கிறது. தமிழக அரசுக்கு வழிகாட்ட பல்வேறு ஆலோசனைக் குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ‘சட்ட மேலவை’




என்பது தேவையில்லாத ஒன்று. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அதே சம்பளம், ஓய்வூதியம் உள்ளிட்ட இதர வசதிகள் இந்த மேலவை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுவதோடு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் அமைச்சராகும் வாய்ப்பும் உருவாகும். புதுச்சேரியில் நியமன சட்டமன்ற உறுப்பினர்களைப் புகுத்தி ஜனநாயகத்தின் மாண்பைக் குலைத்தது போன்ற முயற்சிகளைத் தமிழகத்தில் எக்காலத்திலும் எந்த வடிவிலும் அனுமதிக்கக் கூடாது. ஒரு பக்கம் முந்தைய அதிமுக அரசு கஜானாவைக் காலி செய்து வைத்திருப்பதால் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்த நலத் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்லிக்கொண்டு, மறுபக்கம் காலாவதியாகிப்போன சட்ட மேலவையை மீண்டும் அறிமுகப்படுத்த முயற்சி செய்வது ஏற்புடையதல்ல. கொரானா பெருந்தொற்றினால் வருவாய் இழப்பு ஏற்பட்டு மாநிலம் தத்தளிக்கும் சூழலில் இந்த கவுரவப் பதவிகள் தேவையற்றவை. காலத்திற்கு ஒவ்வாத இந்த மேலவை எனும் அமைப்பை இந்தியாவின் பல மாநிலங்கள் ரத்து செய்துவிட்டன. மக்கள் வாழ்வில் எந்த ஏற்றத்தையும் மாற்றத்தையும் உருவாக்காத, அதே சமயத்தில் செலவீனம் பிடித்த இந்த அவையால் தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் யாதொரு பயனுமில்லை. தங்களுக்கு சட்டமன்றத்தில் இருக்கும் பலத்தை வைத்து திமுக ‘சட்ட மேலவை’ என்னும் ஏற்பாட்டை எளிதாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால், மாநிலம் இன்றிருக்கும் சூழலில் இது தேவையற்றது என்பதை ஆள்வோருக்கும் மக்களுக்கும் சொல்லவேண்டியது ஜனநாயக சக்திகளின் கடமை.

‘சட்ட மேலவை’ மீண்டும் கொண்டு வரும் திட்டம் தமிழக அரசுக்கு இருக்குமானால், இன்றைய அரசியல், பொருளாதார சூழல்களை மனதிற்கொண்டு இந்த முயற்சியைக் கைவிடும்படி தமிழக முதல்வர் அவர்களை மக்கள் நீதி மய்யத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் கூறினார்.

SRI DHARANI INTERNATIONAL Sr. Sec. SCHOOL

Senior Secondary School- Affiliated to CBSE- Affiliation No.1930548
No.1.,Sri Dharani Nagar, Sirukadambur, Gingee, Villupuram Dist. 604202.
Contact Number: 9381007692, 7339075714, 7339034593, 9489166714
E- Mail Id: info@sridharaniintlschool.com

TOPPERS IN GRADE X (A.Y. 2020-2021)

| SAFIYA H | TITIKSSHA S M R | JAYASRI B |
|---|---|---|
| TOTAL: 486/500 | TOTAL: 478/500 | TOTAL: 446/500 |
| English - 95 | English - 90 | English - 88 |
| Tamil - 98 | Tamil - 97 | Tamil - 98 |
| Maths -100 | Maths - 98 | Maths - 87 |
| Science - 96 | Science - 96 | Science - 83 |
| Social Science - 97 | Social Science - 97 | Social Science - 90 |

SUBJECT WISE HIGH SCORE

| | | |
|---|---|---|
| Safiya H | English | 95 |
| Velmurugan V S | Tamil | 99 |
| Safiya H | Maths | 100 |
| Safiya H | Science | 96 |
| Titikssha S M R | Science | 96 |
| Safiya H | Social | 97 |
| Titikssha S M R | Social | 97 |

... Above 400...

| | |
|---|---|
| Draavid M | 432 |
| Tamizholi R | 430 |
| Syed Tarique A | 426 |
| Velmurugan V S | 426 |
| Lokeshwaran V | 412 |
| Deekshitha N | 407 |
| Jai Sankar K | 400 |

100% RESULTS EVERY YEAR
486/500

Wanted Teachers in All Subjects with B.Ed ;
Admission Going On for the Academic Year 2021-2022 from Pre- KG to Class XII

Group of CBSE Schools:
Sri Dharani International Sr. Sec. School, Gingee, Villupuram Dist.
K. K. Dhandapani World Sr. Sec. School, Dheevanur, Villupuram Dist.

Shri. Dr. K.K.DHANDAPANI B.A.,B.L.,M.L.,
Senior Advocate- High Court , Chennai
Founder and Chairman,
Sri Dharani International Senior Secondary School (CBSE), Gingee,
K.K.Dhandapani World Senior Secondary School (CBSE), Deevanur

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மார்க்கம் பட்டியில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ் .செல்லமுத்து தலைமையில்2-ம் கட்ட கோவிசீல்டு தடுப்பூசி முகாம் நடைபெற்றது

ஒட்டன்சத்திரம், ஆகஸ்ட் 07 2021 : திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் , மார்க்கம்பட்டி ஊராட்சியில் 2-ம் கட்ட கோவிசீல்டு தடுப்பூசி முகாம் மற்றும் கபசுரக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின் படியும் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.செல்லமுத்து தலைமையில் நடைபெற்றது. கொரோனா நோயின் தாக்கம் உலக நாடுகளையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மீண்டும் 3-வது அலை தாக்கக்கூடும் என்ற நிலையில் கொடிய நோய் கொரோனாவினை போக்கும் வகையில் உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றன. இந்த சூழ்நிலையில் முன்னதாக 2-வது அலையில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொரோனாநோய் தாக்குதலின் அச்சுறுத்தலில் இருந்து மக்களை மிகத் துரிதமாக காப்பாற்றினார். இதனை அடுத்து 3-வது அலையில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டும் எனும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைவருக்கும் கொரோனா நோய் தடுப்பூசி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படுகிறது. அந்த வகையில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின்படி மார்க்கம்பட்டி ஊராட்சி மக்களுக்கு 2-ம் கட்ட தடுப்பூசி நடைபெற்றது.



இம்முகாமில் ஆண்கள் மற்றும் பெண்கள் சுமார் 180 பேர் ஆர்வமுடன் பங்கேற்று கோவிசீல்டு தடுப்பூசி போட்டுக் கொண்டனர். மேலும் முக கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் கபசுர குடிநீர் அருந்தியும் சென்றனர். இம்முகாமில் வட்டார மருத்துவ அலுவலர் பிரபு, இடையகோட்டை சுகாதார ஆய்வாளர் ரவிச்சந்திரன் , சுரேஷ் , பள்ளி சிறார் நல்வாழ்வு திட்ட அலுவலர் சசிகுமார், ஆய்வக நுட்புனர் சுதாகர், சுகாதார செவிலியர்கள் பிரியா, முருகேஸ்வரி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள், மற்றும் தூய்மைப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். ஊராட்சி செயலர் பி.தனசேகரன் நன்றி கூறினார்.

# செஞ்சி ஸ்ரீ தரணி இன்டர்நேஷனல் பள்ளி சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி

செஞ்சி, ஆகஸ்ட் .07 2021: செஞ்சியில் உள்ள ஸ்ரீதரணி இன்டர்நேஷனல் பள்ளியில் சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு தேர்வில் 100 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர் தேர்ச்சி பெற்ற மாணவர்களை தாளாளர் தண்டபாணி பாராட்டினார். சிபிஎஸ்இ 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியானது. இதில் செஞ்சி ஸ்ரீதரணி இன்டர்நேஷனல் பள்ளியில் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் வெற்றி பெற்று பள்ளிக்கு 100 சதவீத தேர்ச்சியைப் பெற்று தந்தனர் .இது குறித்து பள்ளியின் தாளாளரும் உயர்நீதிமன்ற வழக்கறிஞருமான தண்டபாணி கூறுகையில் மத்திய அரசின் கல்வியான சிபிஎஸ்இ 10ம் வகுப்பு தேர்வில் இப்பள்ளியில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து பத்தாம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்று வருகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் முதன்மையாகவும் மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த வருடம் 100% தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். அதில் முதல் மாணவியாக சபியா என்ற மாணவி 500க்கு 486 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும் ததிக்ஷா என்ற மாணவி 478 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும் ஜெயஸ்ரீ என்ற மாணவி 446 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். மற்றவர்கள் 400க்கு மேல் மதிப்பெண்கள் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். பின்தங்கிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்தில் பெரிய சாதனையை ஏற்படுத்தியிருப்பது ஸ்ரீ



தண்டபாணி இன்டர்நேஷனல் பள்ளி ஆகும் . வெற்றி பெற்றமாணவ மாணவிகள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரையும் மனமார வாழ்த்துகிறேன். இந்த வெற்றியை என்றும் தொடர இறைவனை வேண்டுகிறேன் இவ்வாறு அவர் கூறினார். மேலும் முதல் மூன்று இடம் பெற்ற மாணவிகளை பள்ளியின் தாளாளர் தண்டபாணி பரிசுகள் வழங்கி பாராட்டினார். அப்போது பள்ளியின் நிர்வாக இயக்குனர் தமிழ்குமரன் முதல்வர் சந்தோஷா துணை முதல்வர் சுகுணா ஆசிரியர்கள் ஆனந்த், ராமச்சந்திரன், லட்சுமி, ஜெய்புன்னிசா, பரமேஸ்வரி மற்றும் பெற்றோர்கள் மாணவிகள் மாணவர்கள் உடன் இருந்தனர்.

# இந்தியாவில் முதல்முறையாக ‘ஏர் இந்தியா‘ சார்பில், ‘பாண்டட் டிரக்கிங் சர்வீஸ்‘ கோவை விமான நிலையத்தில் துவக்கப்பட்டுள்ளது

கோவை, ஆகஸ்ட் 07 2021: கோவை சர்வதேச விமான நிலையம் கோவை உள்ளிட்ட சுற்றுப்புறங்களைச் சேர்ந்த 7-மாவட்ட மக்களுக்குப் பயனளித்து வருகிறது. ஏர்போர்ட் வளாகத்தில் அமைந்துள்ள ஏர் கார்கோ அலுவலகத்தில் உள்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் பல்வேறு வகையான கார்கோ புக்கிங் செய்யப்பட்டு விமானங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

கோவையிலிருந்து உள்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு விமானச் சேவை உள்ளது. ஆனால் சர்வதேச விமான போக்குவரத்து பிரிவில், இலங்கை, சிங்கப்பூர், ஷார்ஜா உள்ளிட்ட நாடுகளுக்கு மட்டுமே விமான சர்வீஸ் உள்ளது.

இதுபோன்று வெளிநாடுகளுக்கு அதிக சர்வீஸ் இல்லாத விமான நிலையங்களில் 'பாண்டட் டிரக்கிங் சர்வீஸ்' என்ற திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இதன்படி கோவையிலிருந்து பெங்களூரு, கொச்சி உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு டிரக் வாகனங்கள் மூலம் ஏற்றுமதி பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பல்வேறு உலக நாடுகளுக்கு விமானங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

தற்போது இந்தியாவில் முதல்முறையாக 'ஏர் இந்தியா' நிறுவனம் சார்பில் கோவை 'ஏர் கார்கோ' வளாகத்தில் பிரத்தியேக 'பாண்டட் டிரக்கிங் சர்வீஸ்' அலுவலகம் துவக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏர் இந்தியா ஏரியா மார்க்கெட்டிங் மேலாளர் கிரிஜா கோவை ஏர் கார்கோ உதவி பொது மேலாளர் சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்த சர்வீஸ் துவக்கப்பட்ட காரணத்தால் கோவையில் இருந்து ஏற்றுமதி பொருட்கள் கொச்சின், பெங்களூரு, ஐதராபாத் மற்றும் மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு ட்ரக் மூலம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து 'ஏர் இந்தியா' சார்பில் பல்வேறு வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படும். 'ஏர் இந்தியா'வின் முயற்சி கோவை விமான நிலையத்தை பயன்படுத்தி வரும் ஏற்றுமதியாளர்களுக்கு மிகுந்த



பயன் தரும்.

கோவை விமான நிலையத்தில் ஏற்கனவே தனியார் நிறுவனம் சார்பில், பாண்டட் ட்ரக்கிங் சர்வீஸ் அமலில் உள்ள நிலையில், தற்போது முதல்முறையாக 'ஏர் இந்தியா' போன்ற விமான நிறுவனம் சார்பில் இந்த சர்வீஸ் இந்தியாவிலேயே முதல் முறையாக கோவையில் துவக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தொழிலாளர்கள் அடாவடி கலெக்டர் தலையிட விவசாயிகள் வேண்டுகோள்

விக்கிரவாண்டி, ஆக.07 2021: விக்கிரவாண்டி ஒன்றியம் முட்டத்தூரில் செயல்படும் அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் கூலித் தொழிலாளர்கள் அடாவடி செயல்களால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர் . கலெக்டர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் .

தமிழக அரசு விவசாயிகளிடம் அரசு நேரடியாக நெல் கொள்முதல் செய்து நியாயமான விலையை வழங்க மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது.

விக்கிரவாண்டி ஒன்றியம் முட்டத்தூரில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்தில் 40கிலோ எடைகொண்ட நெல் மூட்டையை எடைபோட மூட்டை ஒன்றுக்கு கூலி ரூபாய் 36 என கிராம முக்கியஸ்தர்கள் நிர்ணயம் செய்து விவசாயிகள் கூலியை வழங்கி வந்தனர் .

இந்நிலையில் இந்த தொகை தற்பொழுது விவசாயிகளிடம் , அங்கு பணிபுரியும் உள்ளூர் தொழிலாளர்கள் அடாவடியில் ஈடுபட்டு , நிலையத்திற்கு வரக் கூடிய விவசாயிகளை தரக்குறைவாக ஒருமையில் பேசி ரூபாய் 40 வரை கூலி வசூல் செய்கின்றனர். இதை அங்கு பணிபுரிகின்ற அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை எனவும் அதிகாரிகளும் தொழிலாளர்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும் புகார் கூறுகின்றனர் .

இது பற்றி முட்டத்தூர் கிராமத்தை சேர்ந்த விவசாயியும் , தே.மு.தி.க., முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் முத்துக்குமரன் , தொழிலாளர்களால் பாதிக்கப்பட்டு விழுப்புரம் நுகர் பொருள் வாணிப கழக மண்டல மேலாளரிடம் ஆடியோ ஆதாரத்துடன் புகார் மனு அளித்துள்ளார் .

இது பற்றி ஹலோ மிரர் மெட்ராஸ் நிருபரிடம் விவசாயி முத்துக்குமரன் கூறியதாவது: மாவட்டத்தில் விவசாயிகள் குறைகளை தீர்க்க நெல் கொள்முதல் நிலையங்களில் பல்வேறு துரித நடவடிக்கைகளை எடுத்த மாவட்ட கலெக்டர் மோகன் , தொழிலாளர்கள் அடாவடி குறித்தும், கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளை விட நெல்



வியாபாரிகள் அதிகம் பேர் , அதிகாரிகள் துணையோடு நெல்மூட்டைகளை விற்ப வருவதால் , விவசாயிகளுக்கு நெருக்கடி ஏற்படுகிறது. இதனால் அரசின் உண்மையான நோக்கமான விவசாயி பயனடைய முடிவதில்லை . மாவட்ட கலெக்டர் தலையிட்டு உடனடி தீர்வு காண வேண்டும். இவ்வாறு விவசாயி முத்துக்குமரன் கூறினார்.

# வால்பாறையில் கொப்புள நோய் பரவலால் தேயிலை உற்பத்தி பாதிப்பு

கோவை, ஆகஸ்ட் 07, 2021: கோவை மாவட்டம் வால்பாறை சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு ஆண்டும் பெய்துவரும் தென்மேற்கு பருவமழையின் காரணமாகவும் பனிமூட்டம் தேயிலை செடிகளின் மீது படிவதாலும் ஜீலை மாதம் தொடக்கம் முதல் தொடர்மழையின் தாக்கத்தால் தேயிலை இலைகளில் பிளிஸ்டல் எனும் கொப்புள நோய் தாக்கத்துவங்கி தேயிலை இலைகள் அனைத்தும் வளர்ச்சி அடையாமல் அப்படியே உதிர்ந்து விழுந்து விடும் இதனால் தேயிலை வளர்ச்சி இன்றி துவண்டு போய்விடும். இதனால் உற்பத்தி பெருமளவில் பாதித்து விடும் அதேபோல தற்போது தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்கி பெரும்பாலான தேயிலை தோட்ட நிறுவனங்களில் உற்பத்தி குறைந்துள்ளது. இந்நிலையில் அந்த கொப்புள நோயை கட்டுப்படுத்த காப்பர் மற்றும் காண்டப் மருந்துகளை தெளிக்கும் பணி சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவன தொழிலாளர்கள்



மூலம் தெளிக்கும் பட்டு வருகிறது இதன் தொடர்ச்சியாக நோய் கட்டுப்படுத்தப்பட்டால் மீண்டும் தேயிலை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

# கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், புதிய பங்கு வெளியீடு ஆகஸ்ட் 10, 2021 செவ்வாய் கிழமை அன்று ஆரம்பம்

சென்னை, ஆகஸ்ட் 07 2021: சிறப்பு வகை ரசாயனங்கள் ஒட்டும் பிவிசி பிசின் மற்றும் மருந்து, வேளாண் - ரசாயனங்கள் உற்பத்தி மற்றும் சிறப்பு வகை ரசாயனத் துறைகளுக்கான மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலை பொருள்கள் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்தி வரும் இந்திய நிறுவனம், கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் ஆகும். இந்த நிறுவனம், பொதுமக்களுக்கு புதிய பங்குகளை ஆகஸ்ட் 10, 2021 முதல் வெளியிடுகிறது.

சம பங்கு ஒன்றின் பங்கு விலைப் பட்டை ரூ. 530 முதல் ரூ. 541 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 27 பங்குகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு 27-ன் மடங்குகளில் விண்ணப்பிக்கலாம். ரூ. 5 முக மதிப்பு கொண்ட இந்த சம பங்கு ) வெளியீட்டில், கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் புதிய பங்கு வெளியீட்டின் மூலம் மொத்தம் ரூ.38,500 மில்லியன் நிதி திரட்டுகிறது. இந்தப் பங்கு வெளியீட்டில் ரூ. 13,000 மில்லியன் இந்த நிறுவனத்தின் புதிய பங்கு வெளியீடாக உள்ளது. சன்மார் ஹோல்டிங்ஸ் லிமிடெட் - க்கு உரிமையான ரூ. 24,634.40 மில்லியன் மதிப்புள்ள சம பங்குகள் பங்குச் சந்தை மூலம் ஆஃபர் பார் சேல் என்கிற முறையில் விற்பனை செய்யப்பட இருக்கிறது. இதேபோல், சன்மார் என்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் -). - க்கு உரிமையான ரூ. 865.60 மில்லியன் மதிப்புள்ள சம பங்குகள் ஆஃபர் பார் சேல் என்கிற முறையில் பங்குச் சந்தையில் விற்பனை செய்யப்பட இருக்கிறது.

கடந்த 1957 ஆம் ஆண்டின், பத்திரங்கள் ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிமுறைகள் ன் படி செபி அமைப்பின் விதிமுறைகளுக்கு




உட்பட்டு, திருத்தப்பட்ட விதிமுறை 31 , செபி விதிமுறைகள் 2018 படி இந்தப் புதிய பங்கு வெளியீடு நடக்கிறது. செபி ஐ.சி.டி.ஆர் விதிமுறைகள், விதிமுறை -ன் கீழ் ,ஏலமுறையில் பங்கு விற்பனை நடக்கிறது. நிகர பங்கு விற்பனையில் 75 சதவிகிதத்துக்கு மேற்படாமல் தகுதி வாய்ந்த நிறுவன முதலீட்டாளர்களுக்கு , நிறுவனம் மற்றும் பங்கு விற்பனையாளர் ஒதுக்க வேண்டும். இதில், 60% விருப்பத்தின் அடிப்படையில் பெரிய முதலீட்டாளர்களுக்கு , செபி அமைப்பின் ஐ.சி.டி.ஆர் விதிமுறைகளின்படி ஒதுக்கீடு செய்யப்படுடும். இதில் மூன்றில் ஒரு பங்கு, பங்குகள் ஆங்கர் முதலீட்டாளர்கள் ஏலம் கேட்டுள்ள விலை அல்லது அதை விட அதிகமாக இருக்கும்பட்சத்தில் அவை உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

# அரசு அலுவலகத்தில் புகுந்து ஊழியரின் கைப்பை திருட்டு - சிசிடிவி காட்சிகள்

கோவை, ஆகஸ்ட் 07 2021: கோவையில் அரசு அலுவலகத்தில் புகுந்த மர்ம நபர் ஒருவர் பெண் ஊழியரின் கைப்பையை திருடிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருபவர் லதா.

கடந்த திங்கட்கிழமை அன்று அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் லதா உட்பட அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்து திரும்பி வந்துபோது தன் இருக்கையில் இருந்த கைப்பை திருட்டு போயிருப்பது லதாவுக்கு தெரியவந்தது.

இது குறித்து தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது புகாரின் அடிப்படையில் அலுவலலத்திற்கு சென்ற போலீசார் அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது மர்ம நபர் ஒருவர் அலுவலகத்தில் புகுந்து லதாவின் கைப்பையை



திருடிச்சென்றது தெரியவந்தது. இதனை தொடர்ந்து சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் மர்ம நபரை போலீசார் தேடி வருகின்றனர். அரசு அலுவலகத்திலேயே புகுந்து ஊழியரின் கைப்பையை மர்ம நபர் திருடிச் சென்ற சம்பவம் சக ஊழியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.



மதுரை ஆகஸ்ட் 07 2021: மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியம் கோட்டநத்தம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.21 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் நாற்றாங்கால் தோட்டத்தை உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் பார்வையிட்டார்.



மதுரை ஆகஸ்ட் 07 2021: மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் வெள்ளலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



திருப்பூர், ஆகஸ்ட் 07 2021: தகுதியை சோதிக்க களைகள் அல்ல இளைஞர்கள் தகுதியான உயர் பதவிகளில் அமர வைக்க வேண்டியவர்கள் இளைஞர்கள் அரசியல் ஆட்சி அதிகாரங்களில் மகுடம் சூட வேண்டியவர்கள் இளைஞர்கள் மஜமுக தலைவர் இப்ராஹிம் பாதுஷா பேட்டி மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது. மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக மணிகண்டன் பொறுப்பேற்றுக் கொண்டார். மேலும் கழக இளைஞரணி செயலாளராக ப.ராஜ்குமார் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் நிறுவனத் தலைவர் எஸ். இப்ராஹீம் பாதுஷா தலைமையேற்தலைமையேற்று பொதுச்செயலாளர் எஸ். வேல்முருகன் முன்னிலை வகித்தார். கழக ஆலோசகர் அபுதாஹிர் தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் காளிச்சாமி இணை ஒருங்கிணைப்பாளர் யுவராஜ் இணைஅமைப்பாளர் சுந்தரம் மற்றும்மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அதிமுக கழக அவைத் தலைவர் முன்னாள் அமைச்சர் இ.மதுசூதனனுக்கு பல்லடத்தில் கண்ணீர் அஞ்சலி

பல்லடம்,ஆகஸ்ட் 07, 2021: அதிமுக கழக அவைத் தலைவர் முன்னாள் அமைச்சர் இ.மதுசூதனன் பல்லடம் தொகுதி பல்லடம் நகராட்சியில் கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கழக அமைப்பு செயலாளர் முன்னாள் அமைச்சர் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் ஆனந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்

பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பல்லடம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கரைப்புதூர் நடராஜன் முன்னாள் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கேபி பரமசிவம் அவர்கள் முன்னிலை. இந்நிகழ்ச்சியில் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் வி.எம் சண்முகம். மாவட்ட புரட்சித் தலைவி அம்மா பேரவை செயலாளர் புத்தரச்சல். பி.பாபு, பொதுக்குழு உறுப்பினர் தண்ணீர்பந்தல் நடராஜன். ஒன்றிய கழக செயலாளர்கள் சித்துராஜ்



யு.எஸ்.பழனிசாமி நகர கழக செயலாளர் ராமமூர்த்தி, பகுதி கழக செயலாளர் சுரேந்திரன் மாவட்ட கவுன்சிலர் ஜெயந்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப செயலாளர் வி எம் கோகுல், வைஸ்பழனிசாமி, பானுபழனிசாமி,மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# எரிச்சநத்தம் ஆதிசக்தி அன்னை ஸ்ரீ மாசாணி அம்மன் தியான பீடத்தில் ஆடி அமாவாசை பூஜை பக்தர்களுக்கு அனுமதி இல்லை

விருதுநகர், ஆகஸ்ட் 07 2021: விருதுநகர் மாவட்டத்தில் கொரோனா பரவலை தடுக்கும் விதமாக அனைத்து கோவில்களிலும் தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது . எரிச்சநத்தம் ஆதிசக்தி அன்னை ஸ்ரீ மாசாணி அம்மன் தியான பீடத்தில் ஆடி அமாவாசை பூஜைக்கு (8.8.2021- ஞாயிற்றுகிழமை) வரை பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படவில்லை என மாசாணி அம்மன் தியான பீட நிர்வாகி ரெங்கராஜா தெரிவித்துள்ளார். ஆடி அமாவாசை அன்று அம்மனுக்குரிய சிறப்பு பூஜை யாக பூஜை கருப்பசாமி படையல் அனைத்தும் தியான பீட நிர்வாகிகள் மூலம் சிறப்பாக நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.



# பாலக்கொல்லை கிராமத்தில் பட்டு வளர்ப்பில் இயந்திரம் மற்றும் மல்பரி வயல்களில் பயிற்சி முகாம்

விருத்தாசலம், ஆக 07 2021: விருத்தாசலம் அருகிலுள்ள பாலக்கொல்லை கிராமத்தில் பட்டு வளர்ப்பில் இயந்திரம் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கபட்டது

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அருகிலுள்ள , கம்மாபுரம் வட்டாரத்திற்குட்பட்ட பாலக்கொல்லை கிராமத்தில், வேளாண்மை துறை சார்பில் பட்டு வளர்ப்பில் இயந்திரம் பயன்படுத்துதல், குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கம்மாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுதமதி தலைமை தாங்கினார், வட்டார தொழில் நுட்ப மேலாளர் தங்கதுரை வரவேற்றார், பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் பிரசாத், மல்லிகா ஆகியோர் விவசாயிகளுடன் மல்பரி வயல்களுக்கு நேரிடையாக சென்று விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு குறித்து நேரிடையாக செயல் விளக்கமளித்து பயிற்சி அளித்தனர் பின்னர் பட்டு வளர்புக்கான. கொட்டகை அமைப்பதற்கான பயிற்சியும்



அளிக்கபட்டது. இப்பயிற்சி முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி, அட்மா உதவி தொழில் நுட்ப மேலாளர் ரமேஷ், செல்லமுத்து மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் ரூ.29,600 கோடி உயர்வு

மும்பை 07 ஆகஸ்ட் 2021: ஸ்ரீராம் குழுமத்தின் ஒரு பகுதியான சென்னையைச் சேர்ந்த முன்னணி வங்கி சாரா நிதி நிறுவனமாக இயங்கி வரும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஸ்ரீராம் சிட்டி) இன்று, நிதியாண்டின் முதல்காலாண்டின் ஃபைனான்சியல் ரிசல்ட்டினை அறிவித்துள்ளது. நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் 4% உயர்ந்து ரூ.29,599 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, செப்டம்பர் 2019க்குப் பிறகு மிக உயர்ந்த அளவாகும். தள்ளுபடிகள் ரூ.4,560 கோடிக்கு அதிகமாக இருந்தன, அதாவது, குறைந்த தளத்தில் 244% அதிகரித்துள்ளது, ஆனால் தொடர்ச்சியாக 30.6% குறைவாக இருந்தது குறிப்பிடத்தக்கது. வரிக்குப் பிந்தைய இலாபமானது கடந்த ஆண்டு ரூ. 192 கோடியாக இருந்தது. தற்பொழுது, இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் 8.2% உயர்ந்து ரூ. 208 கோடி எனும் உச்சத்தைத் தொட்டுள்ளது.

செயல்திறன் குறித்து ஸ்ரீராம் சிட்டியின் எம்.டி. & தலைமை நிர்வாக அதிகாரியான, ஒய்.எஸ்.சக்கரவர்த்தி கூறிகையில்: "ஊரடங்குக் காரணமாக முதல் காலாண்டு பாதிக்கப்பட்டது, அதே நேரத்தில் ஜூன்-ஜூலை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காட்டியது மற்றும் 2ஆம் காலாண்டு இல் இயல்புநிலை எதிர்பார்க்கப்படுகிறது. எம்எஸ்எம்இக்கள் நிதி அணுகலை மிக முக்கியமான தடையாக உணர்கின்றன, மேலும் தரமான தோற்றத்தை உன்னிப்பாக கவனித்துக்கொண்டே நாங்கள் அவர்களின் நிதி இடைவெளியை தொடர்ந்து குறைக்கிறோம். டிஜிட்டல் மயமாக்கலின் மூலம், வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சில தடைகளை நாங்கள் சரி செய்ய முடிந்தது. கோவிட் தாக்கம் குறைந்து வருவதால் இருசக்கர வாகன கடன் சந்தையில் அதிக தேவை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் இயக்கத்தின் தேவை அதிகமாக உள்ளது மற்றும் மின்சார வாகனங்கள் புதிய வாய்ப்புகளை வழங்குகின்றன. தங்க நகை நிதி பிரிவு தொடர்ந்து எங்களுக்கு ஒரு கவனம் செலுத்தும் பகுதியாக உள்ளது மற்றும் கணக்காண்டு-22 இல் இந்த பிரிவில் நாங்கள் அதிக கவனத்தை மேற்கொள்வோம்.

# திண்டிவனத்தில் விரைவில் பேருந்து நிலையம் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தகவல்

திண்டிவனம், ஆக 07 2021: திண்டிவனத்தில் உள்ள வஃபோர்டுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும், இல்லையென்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எச்சரிக்கை விடுத்தார். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை அருகிலுள்ள வஃபு போர்டுக்கு சொந்தமான இடத்தில் சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், வாடகைக்கு விடப்பட்டதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், தமிழக முதல்வருக்கு சிலர் நேரடியாக புகார் மனுக்கள் அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது. இந்நிலையில் இது குறித்து வஃபு போர்டுக்கு சொந்தமான இடத்தினை சிறுபான்மைப் பிரிவு நல அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அந்த பகுதிகளை நேரில் ஆய்வு செய்தார். பின்பு வஃபு போர்டு நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினார். பின்னர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களையும், வாடகை விடுவதில் முறைகேடுகள் நடைபெற்ற இடங்களையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமென்றும், அப்படி



இல்லை என்றால் நிர்வாகத்தின் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார் . அப்போது பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், திண்டிவனத்திற்கு விரைவில் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்றும், தமிழக முதல்வரின் உத்தரவின்படி துறை சார்ந்த அதிகாரிகள் மூலம் அதற்கான ஆய்வு நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

# ஹோண்டா 2 வீலர்ஸ் இந்தியா நிறுவனம் இருசக்கர வாகனத் துறை வளர்ச்சியில் முன்னிலை வகிக்கிறது: 2021 ஜூலை மாதத்தில் 3 லட்சத்து 85 ஆயிரத்து 533 வாகனங்களை விற்பனை செய்துள்ளது

